# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## அசல் வழக்கு எண். 594/2022

திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்கள்,

Deposition of PW– 1 solemnly affirmed in accordance with the provisions of Evidence Act, X of 1972, this the 13th day of June, 2023.

| | |
|---|---|
| பெயர் : திருமதி. பழனியம்மாள் | கிராமம் : |
| க/பெ. : திரு. சுப்ரமணி | தொழில்: |
| வயது : | மதம்: |
| | ஜாதி: |

**முதல்விசாரணை**:–

நான் இந்த வழக்கில் வாதி. முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமுலமாக தாக்கல் செய்கிறேன். 22.08.1972ம் தேதியிட்ட என் தாத்தா சின்னத்தம்பியும், அவர் தந்தை வெள்ளைய கவுண்டரும் கோவிந்தராஜ்க்கு எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் – **வா.சா.ஆ.–1**. என் தகப்பனார் 1ம் பிரதிவாதி சந்திரனுக்கு கோவிந்தராஜ் எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் – **வா.சா.ஆ.–2**. என்தகப்பனார் 4ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் – **வா.சா.ஆ.–3**. என்தகப்பனார் 5, 6 , 7 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் – **வா.சா.ஆ.–4**. என்தகப்பனார் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மென்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் – **வா.சா.ஆ.–5**. என் தகப்பனார் 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மென்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் – **வா.சா.ஆ.–6**. 1 மற்றும் 4 பிரதிவாதிகளின் பெயர்களில் உள்ள பட்டாவின் பதிவிறக்க நகல் – **வா.சா.ஆ.–7**.

என் தாத்தா சின்னத்தம்பி கவுண்டர் பெயரில் உள்ள பட்டாவின் பதிவிறக்க நகல் – **வா.சா.ஆ.–8**. தாவா சொத்தின் வழிகாட்டு மதிப்பின் பதிவிறக்க நகல் –**வா.சா.ஆ.–9**. தாவா சொத்தின் வில்லங்க சான்றிதழின் பதிவிறக்க நகல் –**வா.சா.ஆ.–10**. எனது ஆதார் அடையாள அட்டையின் நகல் – **வா.சா.ஆ.–11**. (அசலுடன் ஒப்பிட்டுப் பார்த்து குறியீடு செய்யப்படுகின்றது).

Sd./-S. Jeganathan,
I Additional District Judge,
Salem.